Registered as a NewsPaper

பக்கங்கள் - iv

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை-05 | 21-11-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 276



கிளிநொச்சியில் கணினி மையம்

TCC

கணினி விற்பனையாளரும் திருத்தசேவையாளரும்

கி-8690 யாழ். சாலை, கிளிநொச்சி.


## மாவீரர்தின ஏற்பாடுகளுக்கு இடையூறு செய்வதில்லை என படைத்தரப்பு இணக்கம்

### புலிகள் இராணுவத்தரப்பு சந்திப்பில் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் மாவீரர்தின ஏற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதில்லை என நேற்று புலிகளும் இராணுவத்தரப்பும் மேற்கொண்ட சந்திப்பின்போது இராணுவத் தரப்பு இணக்கம் தெரிவித்தது.

தென்மராட்சியின் மீசாலை மற்றும் வல்வெட்டித்துறை நெடியகாடுப் பகுதிகளில் மாவீரர்தின ஏற்பாடுகளைப் படைத்தரப்பு நேற்றுமுன்தினமிரவு குழப்பியடித்தமை தொடர்பாகச் சந்திப்பொன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறை சார்பில் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங் கன் மற்றும் யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் உள்ளிட்ட அரசியல் துறைப் போராளிகள் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச் சந்திப்பில் படைத்தரப்பின் சார்பில்

(IV.ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸ் போர்க் கப்பல் இன்று கொழும்பு வருகிறது

(கொழும்பு)

பிரான்ஸ் நாட்டின் போர்க்கப்பல் மார்னீ இன்று கொழும்பு துறைமுகத்திற்கு வரவிருக்கிறது. எதிர்வரும் 26ம் திகதி வரை இந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும்.

இந்த வேளையில் இலங்கை கடற்படை அதிகாரிகளுடன் போர்க்கப்பலின் தலைவர் ஹேர்வ்போய் பேச்சுவார்த்தைகளை நடாத்தவிருக்கிறார்.

இதன்போது இருதரப்பு உறவுகளை ஊக்குவிக்கும் கருத்துகள் பரிமாறிக்கொள்ளபடவிருக்கின்றன.

158 மீற்றர் நீளத்தையும். 22 மீற்றர் அகலத்தையும் கொண்ட இந்தக் கப்பலின் நிறை 18.000 தொன்களாகும்.

கப்பலின் 13 அதிகாரிகள் உட்பட 177 சிப்பாய்கள் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளனர். (32)

# அரசியல் நெருக்கடி நீடித்துச் செல்வது போர் நிறுத்த உடன்பாட்டைப் பாதிக்கலாம்!

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் எச்சரிக்கை

**யுத்தநிறுத்தப் பாதையைவிட்டு உடனடியாகச் செல்லும் சாத்தியக்கூறு இல்லை. தற்போதைய சூழ்நிலை நீண்ட காலம் நிலவுமானால் சிறிய பிரச்சினைகள் பெரிதாக மாறுவதற்கு வாய்ப்புண்டு. சமாதான நடவடிக்கைகள் நடைபெறாமல் உள்ள நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை நிலைநிறுத்துதல் மிகவும் கடினம் என நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் சமாதான முயற்சிகளில் தமது பங்களிப்பை மீண்டும் ஆரம்பிக்க விருப்பத்துடன் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தென்னிலங்கையின் அரசியல் நெருக்கடிகள் காலம் தாழ்த்தப்படாது தீர்க்கப்படவேண்டும். கால தாமதம் போர்நிறுத்த உடன்படிக்கை வெளிநாட்டு உதவிகள் என்பவற்றை பாதிக்கலாம்

அத்துடன் சனாதிபதியும்-பிரதமரும் தமது அதிகாரப்போராட்டத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றார். தமது அரசு எவ்வேளையிலும் உதவி செய்யக் கூடியவாறு தயார்நிலையில் இருக்குமென அவர் கூறியுள்ளார்.

## தற்போதைய அரசியல்முறுகலைத் தீர்க்க பொ.ஐ.மு.வுடன் ஒப்பந்தத்திற்குத் தயார்

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

நாட்டில் தற்சமயம் எழுந்துள்ள அரசியல் முறுகலைத் தீர்த்துக் கொள்ள பொதுசன ஐக்கிய முன்னணியுடன் எழுத்து மூல ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாரென அரசாங்கம் தெரிவித்துள்ளது. அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் பிரதான பிரச்சினை தொடர்பாக ஏற்றுக்கொண்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஐ.தே கட்சியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் பொது இணக்கப்பாடொன்றிற்கு வரவேண்டும் என்றும் அவர்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா -ரணில் முரண்பாடுகளை விட்டு புலிகளுடன் பேச்சுகளில் இணையவேண்டும்

### ஜப்பான் அரசாங்கம் வலியுறுத்து

சனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையிலான வேறுபாடுகளை நீக்கி மீண்டும் புலிகளுடனான பேச்சுவார்த்தையில் இணைய வேண்டுமென ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கான காலக்கெடு எதனையும் விதிக்கவில்லையென ஜப்பானிய வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். நோர்வே அரசு சமாதான முயற்சிகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதைத் ஜப்பான் புரிந்து கொண்டுள்ளது எனவும் அதனால்

(IV.ஆம் பக்கம் பார்க்க)

## தமிழினத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த தலைவரால் ஆரம்பிக்கப்பட்டதே புலிகளின்குரல்

### 13ஆவது ஆண்டுவிழாவில் தமிழன்பன்

(அலுவலக செய்தியாளர்)

தமிழினம் தனது உண்மை நிலைப்பாட்டை வெளியுலகிற்கு எடுத்துக் கூறுவதற்கு தமக் கேன ஒரு ஊடகம் இல்லாதிருந்த காலத்தில் அதன் தேவையை உணர்ந்தும் எமது தாயக விடுதலைப் போராட்டத்தை வீச்சாக்கக் கூடிய வகையிலும் சமூகத்தை மேம்படுத்தக் கூடிய வரையிலும் எமது தேசியத் தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதே புலிகளின் குரல் வானொலி என நேற்று புலிகளின்குரல் நிறுவனத்தின் பதின்மூன்றாம் நிறைவு நிகழ்வில் தலைமைதாங்கி உரை நிகழ்த்துகையில் அதன் பொறுப்பாளர் நா.தமிழன்பன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1990ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வானொலி இன்று பல்வேறுபட்ட வளர்ச்சிநிலைகளை அடைந்துள்ளதுடன்.

எமது மக்களுக்கு ஒரு அரங்க வாய்ப்பை ஏற்படுத்தி கிராமங்களில் உள்ள திறமைசாலிகளை கலைஞர்களை வெளியில் கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது. மக்களின் உணர்

(IV.ஆம் பக்கம் பார்க்க)




### - சபாநாயகருக்கு எதிராக -

## நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்க்கட்சிகள் தயாரிப்பு

(கொழும்பு)

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தயாரிக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சிகள் தெரிவிக்கின்றனர்.

அரசியல் அமைப்பின் நான்காவது சரத்தின்படி நாடாளுமன்ற அமர்வை நடத்துவதற்கு பெரும்பான்மை உறுப்பினர்களுக்கு உரிமை இருப்பதாக சபாநாயகர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார். சபாநாயகரின் இந்த அறிவிப்பு அரசியலமைப்புக்கு முரணானது எனவும் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை குறைத்து மதிப்பிட்டதாகவும் தெரிவித்து,

(IV.ஆம் பக்கம் பார்க்க)

### - கிளியில் கணினிப் பயிற்சி நிலையத்தில் -

## ஆபாசப்படம் பார்த்த மூவர் காவல்துறையினரால் கைது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைந்துள்ள கணினிப்பயிற்சி நிலையம் ஒன்றில் இரகசியமான முறையில் ஆபாசப்படம் பார்த்துக்கொண்டிருந்த மூவரை கிளிநொச்சி காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

(IV.ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் நாள் நவம்பர்-27

**மாவீரர்களின் சாவுகள், எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக-எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக-எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக-அமைந்துவிட்டன.**

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

# மிதிவெடி அகற்றும் பணியாளர் வெடிவிபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் ஏற்பட்ட வெடிபொருள் விபத்து ஒன்றில் கலோட்ரெஸ்ட் மிதி வெடி அகற்றும் ஊழியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றைய தினம் நடைபெற்ற இவ் விபத்தில் நல்லூரடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கு.கணேஸ் (வயது 28)என்பவரே காயமடைந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது படையினரால் கைவிடப்பட்ட பாதுகாப்பு அரண்களை அண்மித்த பகுதியில் மிதி வெடியகற்றும் செயற்பாட்டிற்கான படையினர் தம் மிதிவெடி புதைப்பு சம்பந்தமாக வழங்கிய விளக்க வரைபடத்தின் தெளிவு இன்மையால் தவறாக ஒரு இடத்தை தோண்டியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

# ரோந்து அதிகரிப்பு

யாழ். குடாநாட்டின் பிரதான வீதிகளின் தமது ரோந்து நடவடிக்கைகளைப் படையினர் மீண்டும் அதிகரித்துள்ளனர். குறிப்பாக மாவீரர் துயிலுமில்ல சூழலில் படையினரது ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (27)

# உடன் தொடர்புகொள்ளவும்

பொன்நகர் முள்ளியவளையில் வசித்து வந்த சின்னையா சின்னத்தம்பி என்பவரை புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சி.சாரதா என்பவரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்.

7ஆம் வட்டாரம், I.C.R.C. அருகாமையில்.
புதுக்குடியிருப்பு.

**சி.சாரதா**

(3887)

# முக்கிய அறிவிப்பு

ஒட்டுசுட்டான் வீதி புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தென்றல் இலத்திரனியல் நிறுவனத்தில் (தென்றல் கடை) 01-06-2003 இற்கு முன்பு திருத்தக் கொடுத்த இலத்திரனியல் பொருட்கள், மணிக்கூடுகள் என்பனவற்றை மீளப் பெறாதவர்கள் எதிர்வரும் 20-12-2003இற்குள் உரிய ஆவணத்துடன் சமூகம் தந்து, அப்பொருட்களை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேற்குறித்த திகதிக்குள் மீளப் பெறப்படாத பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

**நிர்வாகம்.**

(3733)

# துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி. ம.இராகவனின் அன்னையாரான திருமதி பார்வதி கணபதிப்பிள்ளை அவர்கள் கடந்த *17.11.2003* திங்கட்கிழமை கொழும்பில் சிவபதமடைந்த செய்தி கேட்டு அன்னாரின் குடும்பத்தின் துயரில் பங்கு கொண்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், சிற்றூழியர்கள்,**
**மு/பாரதி வித்தியாலயம்,**
**வள்ளுவர்புரம், விசுவமடு.**

(3886)

# தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணி நிலை** :- அலுவலர் (பயிலுநர்)

**தகைமைகள்** :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக் கொள்ளக்கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத் திட்டம் :- 4,500 + 4,000**

**அகவை எல்லை** - 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவு செய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் **"ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை-அலுவலர் (பயிலுநர்)"** எனக் குறிப்பிடப்பட்டு **2003-12-15** ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலாளர்,**
**ஆளுகைப் பகுதி,**
**நடுவப் பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு: நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத் தபாலில் (மேலாளர், ஆளுகைப் பகுதி, நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி-8910)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி சீதாதேவி கெங்காதரன்



காலத்தின் காயமதில் கண்ணீரில் கனிகின்றோம்
காதோரம் காற்றினில் கலந்து கலங்கிய செய்தியால்
காலத்தைக் கடந்து கனிந்த காரியங்களால்
கங்காதரனை காப்பாற்றிய கைப்பிடித்து கன்னியவள்.

காலத்தை வென்று கனிந்திடும் காரியங்களால்
கலங்கிய மக்களைக் காத்திடக் கைகொடுத்தனள்.
காலம் இன்று கடந்திட்ட காலனவன்
கவர்ந்திட்டான் கலங்கிய கண்ணீரஞ்சலி
செலுத்துகின்றோம்.

மருத்துவ உலகிற்கு
மாபெரும் பேருதவியாக விளங்கி
மழலைச் செல்வங்களைப் பெற்று
அவர்கள் மேம்பட அயராது பாடுபட்டு
நம் வைத்தியருடன் வையத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
இறையடி சேர்ந்துவிட்ட
அன்னைக்கு ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

எமது மருத்துவமனைகளில் நேர காலம் பாராது மகத்தான மருத்துவ சேவையாற்றிக்கொண்டிருக்கும் Dr.கெங்காதரன் ஐயா அவர்களின் அன்புத் துணைவியார் அவர்களின் திடீர் மறைவினால் நாம் மிகவும் ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம்.

அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
வைத்தியர்கள்,பணிப்பாளர்,பணியாளர்கள்,
டாக்டர் பொன்னம்பலம்
ஞாபகார்த்த மருத்துவமனை,
கிளிநொச்சி.

வைத்தியர்கள்,பணிப்பாளர்,
பணியாளர்கள்,டாக்டர்
பொன்னம்பலம் ஞாபகார்த்த
மருத்துவமனை ,
புதுக்குடியிருப்பு.

(சி-8721)

## - தமிழீழ மாவீரர் நாள் 2003 -

# மாவீரர் தம் ஈகமும், வீரமும் என்றுமே போற்றத்தக்கவை

தமது இன்னுயிரை ஈந்த விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலை முறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும், ஈகங்களும், அருஞ் செயல்களும் மக்களிடம் எடுத்துச்சொல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினரும் அவலப்படக்கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானதுதான் தமிழீழ மாவீரர்நாள்.

தமிழீழ விடுதலைப்போருக்கு இன்னுயிர் ஈந்து உரமாகிப்போன மா ,ர்களின் எண்ணிக்கை பத்து, நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரரையும் தனித்தனியாக ஆண்டு தோறும் அவரவர் நினைவு நாட் களில் நினைவுகூர இயலாது என்ற நிலையில் அனைவரையும் ஒரேநாளில் நினைகூரத்தக் கதாக தமிழீழ விடுதலைப் போரில் முதற்களச்சாவடைந்த இயக்க வீரன் லெப்ரினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவு நாளான நவம்பர் 27ஆம் நாளை பொதுவான நாளாகத் தேர்ந்தெடுத்த எமது தலைவர் 1989 ஆம் ஆண்டில் தமிழீழ மாவீரர் நாளை அறிவித்தார்.

விடுதலைப்போராட்டத்தில் உலகம் வியக்கும் வகையிலே புதிய வரலாறு படைத்து புதுமை சேர்த்து நிற்கும் எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் மண் மீட்புப் போரிலே பல வெற்றிகளைக் குவித்து வரும் அதேநேரம், நாட்டை எல்லாத்துறைகளிலும் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைத் தீட்டி வழிகாட்டி இயங்கிவருவதோடு, தூய்மை யான தேசிய விடுதலைப் போரை வீறோடு நடாத்தி வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களைப் போற்றி நினைவில் நிறுத்தவும், அவர்களது பெற்றோரும், குடும்பத்தினரும் அல்லலுறும் நிலையை மாற்றவும் எனப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தி வருகின்றார்.

- தமிழீழ மாவீரர் பணிமனை.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் 2003

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் இதுவரை மீளப்பெறாதோர் பின்வரும் அட்டவணைக்கிணங்கத் தமக்கு வசதியான ஏதாவதோரிடத்தில் மீளப்பெற்றுக் கொள்ளலாம்.

21.11.2003. (வெள்ளி)

ஸ்ரீசுப்பிரமணிய மகா வித்தியாலயம்-புதுக்குடியிருப்பு பி.ப.03.00 மணி-பி.ப.3.30.

22.11.2003 (சனி)

வருவாய்ப்பகுதிச் செயலகம் - புளியங்குளம் காலை08.00மணி-காலை09.00 மணி

விடத்தல் தீவு றோ.க.பாடசாலை - விடத்தல்தீவு பகல் 12.30மணி-பகல் 12.45மணி

கறுங்கண்டல் றோ.க. பாடசாலை - கறுக்காய்க்குளம் பி.ப.02.00 மணி-பி.ப.2.30 மணி

மல்லாவி மத்திய கல்லூரி - மல்லாவி பி.ப.04.30 மணி-பி.ப.05.00 மணி

23.11.2003 (ஞாயிறு)

வேம்பொடு கேணி அ.த.க. பாடசாலை - பளை காலை 08.00 மணி-பகல் 11.00 மணி

கிளி.மத்திய கல்லூரி - கிளிநொச்சி பி.ப.03.00 மணி-பி.ப.03.30 மணி

குறிப்பு:- பளை, புளியங்குளம் ஆகிய இடங்களுக்கு வருபவர்களுக்கு நுழைவாயிலருகே ஊர்தி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# பாண்டியன் குளத்தில் மக்களால் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

பாண்டியன் குளம் பிரதேசத்தில் கரும்புள்ளியான் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் கரும்புள்ளியான் கிராமத்திலுள்ள மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை அன்று தேசிய எழுச்சிப் பேரவை செயாலளர் சு.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கரும்புள்ளியான் கிராமத்திலுள்ள 09 மாவீரர்களின் திருவுருவப் படங்களையும் தாங்கியவாறு கரும்புள்ளியான் குழாய் கிணற்றுச் சந்தியில் இருந்து மாவீரர்களின் பெற்றோர் இருதயநாதர் முன்பள்ளிச் சிறார்களின் வாத்திய இசையுடன் அழைத்து வரப்பட்டனர். இதில் பொதுச் சுடரினை கரும்புள்ளியான் கிராம சேவையாளர் நவரத்தினம் அவர்களும் தமிழீழ தேசியக் கொடியை பாண்டியன்குளப் பிரதேச பொறுப்பாளர் கலைவாணன் அவர்களும் ஏற்றி வைத்தனர்.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கான மலர் மாலையினை விநாய கர்புரம் மாவீரர் படிப்பகத்தின் தலைவர் தனிநாயகம் அவர்களும் மாவீரர்களின் பெற்றோர்களும் அணிவித்தனர். அகவணக் கம் செலுத்தப்பட்டது. சிறப்புரையினை முன்னாள் மாதர் சங்கத் தலைவி திருமதி. கமலேஸ்வரி அவர்களும் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சண்முகலிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் .சி.கலைவாணன் அவர்களும் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள் எனும் கவிதையும் கரும்புள்ளியான் இருதய நாதன் முன்பள்ளிச் சிறார்களின் இசையும் அசைவும் புரட்சிப் பாடலுக்கான அபிநயம் எனும் பல நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் கிராம மக்கள் பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (24)

## வட இலங்கை சங்கீதசபை விண்ணப்பம்

2004 ஆம் ஆண்டிற்கான வட இலங்கை சங்கீதசபை பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் கிளி.வலயக்கல்விப்பணிமனையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என கிளி. வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவிக்கின்றார்.


## ஏல விற்பனை

கிளிநொச்சி அம்பாள் குளக்கிராமத்தில் பயிரழிவால் 14.11.03 அன்று பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடு கறுப்பு நிறம் பசு ஆர்.ஓ.குறி மாட்டை இதுவரை உரிமையாளர் பெறாததால் 24.11.2003ஆம் திகதி அன்று அம்பாள் குளம் ஆர்.டி.எஸ். செயலகத்தில் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. எனவே கால்நடையின் உரிமையாளர், 22.11.2003ஆம் திகதிக்கு முன்பு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

அம்பாள் குளம் கமக்கார அமைப்பு (3888)



## சாவு அறிவித்தல்

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வற்றாப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதரன் சீதாதேவி 19.11.2003 அன்று காலமானார். அன்னார் டாக்டர் ரி.கெங்காதரன் அவர்களின் அன்புத் துணைவியாரும், டாக்டர் சந்திரிக்கா தங்கராசா [அவுஸ்திரேலியா], திருமதி சுலோச்சனா புகானந்தன், திரு.கரிச்சந்திரன், திரு.நாகேந்திரன் [சிங்கப்பூர்] ஆகியோரின் அன்புத் தாயும் கலாநிதி ஜெயசிதம்பரநாதன், சிவபாக்கியம், பசுபதி, திரு.ரி.பத்மநாதன், திருமதி.கமலாதேவி சண்முகராசா, திரு.ரி.விஸ்வநாதன், ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. தங்கராசா, காலஞ்சென்ற திரு.புகானந்தன், திருமதி.சுலோச்சனா கரிச்சந்திரன், திருமதி ரஞ்சினி நாகேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் வொருஜினி, அர்ச்சனா, சஞ்சீவன், கேமலதா, நிரூசன், சுரேஸ், அருண், சிவகாமி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 22.11.2003 [சனிக்கிழமை] 11.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்: டாக்டர் கெங்காதரன், துணைவர் (சி-8720)


# அரசின் வரவு—செலவுத்திட்டம் ஒரு புஸ்வாணம் என்கிறார் சரத் அமுனுகம

(கொழும்பு)

அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் ஒரு புஸ்வாணம் என பொ.ஐ முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம கூறியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட யோசனைகள் மீதான விவாதத்தை ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வரவு- செலவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட காலம் வரை அரசாங்கம் தீவிர பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்ததால் மக்கள் அதிகமான சலுகைகளை எதிர்பார்த்தார்கள் இவ் எதிர்பார்ப்புக்கள் பொய்த்து விட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# பௌத்த மகா சங்கத்தை அனுரா அவதூறாகப் பேசியுள்ளார்

## - புத்திர ஹித்த தேரர் சீற்றம்

பௌத்த மகா சங்கத்தினரை அவதூறாகப் பேசியதாக அனுரா பண்டார நாயக்க மீது பௌத்த பீடாதிபதி புத்தர ஹித்த தேரர் கடும் சீற்றம் அடைந்துள்ளார்.

அனுரா கூறியது மகா சங்கத்தை பெரும் அவமானத்திற்கு உட்படுத்தி உள்ளது அனுரா பண்டாரநாயக்கா போன்றவர்கள் கீழ் மட்ட செயலைச் செய்துள்ளார்கள். இதை எக்காரணம் கொண்டும் எமது மகா சங்கம் அனுமதிக்காது என அஸ்கிரிய மகாபீடாதிபதி கூறியுள்ளார்.

அண்மையில் பௌத்த பிக்கு ஒருவர் அனுரா குறித்து வெளியிட்ட தகவல் தொடர்பாக அப் பௌத்த பிக்குவின் காவி அங்கியை கிழித்தெறியப் போவதாக அனுரா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## குழு அமைப்பு

தற்போதைய தேர்தல் முறையை மாற்றியமைக்கவென நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஸ்ரீ.ல.சு. கட்சியின் யோசனைகளை தெரிவிக்கும் குழுவில் 5 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவில் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்ரமநாயக்க, ரொனிடிமெல், சரத்அமுனுகம, றெஜினோல்ட்கூரே, செனவிரத்ன என்போர் அடங்குவர்.

இக்குழுவின் பரிந்துரைகள் இன்னும் இரு வாரங்களில் தெரிவுக் குழுவிடம் கையளிக்கப்படும்.

## கொழும்பு வருகை

(லண்டன்)

ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் கிறிஸ்ரேஸ்பர் பற்றன் இரு நாட்கள் விஜயமொன்றை மேற்கொண்டு 25ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் டிரோன் பெனாண்டோ, ஜீ.எல். பீரிஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் மற்றைய கட்சிகளின் பிரமுகர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

# கிளி .யில் நாளை மறுதினம் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு வரும் 23.11.2003 நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கிளிநொச்சி பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் வைத்து மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இம் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் பொதுமக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கிளிநொச்சி பிரதேச அரசியல்துறையினர் வேண்டுகை விடுத்துள்ளனர். (சோ)


## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில் முத்தாக 08 □ 12 □ 1979



தாயக மடியில் வித்தாக 21 □ 11 □ 2000

### கப்டன் சரவணன்

[பெருமாள் சூரிய மூர்த்தி]

மன்னார் கட்டையடம்பன் பகுதியில்
இராணுவத்துடனான மோதலின் போது
மண்மீட்பு வேள்வியிலே
ஆகுதியான எம் உறவே
மாவீரனாய் நீயாகி-இன்று
மறைந்ததே வருடங்கள் மூன்று
மாவீரர் நாளதனில்
மகத்தான வெற்றியை ஈட்ட
மன்னார் போனவனே
மறைந்து ... நீ எம்மைவிட்டு
மறையாது ஐயா உன் நினைவு
என்றும் எம் மனங்களைவிட்டு.

உன் நினைவுகளுடன்,
குடும்பத்தினர்,
மற்றும் உறவுகள்,


உழவன் ஊர்,
தருமபுரம். (3884)

# துருக்கி-ஸ்தான்பூலில் குண்டுவெடிப்புக்கள்; பிரிட்டிஷ் ராஜதந்திரி உட்பட 26 பேர் பலி!

## 390 பேர் காயம், பலர் ஆபத்தான நிலையில்

துருக்கிய தலைநகர் ஸ்தாமபுலில் நேற்று இடம் பெற்ற இரட்டைக் குண்டுத் தாக்குதலில் சுமார் 26 பேர் கொல்லப் பட்டனர். மேலும் 390 பேர் காயமடைந்துள்ளனர்.

தலைநகரிலுள்ள பிரிட்டிஷ் கௌன்ஸிலர் அலுவலகம் மற்றும் வங்கியொன்றின் தலைமையலுவலகம் என்பனவே குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகின.



பிரிட்டிஷ் இராஜதந்திரி ஒருவர் கொல்லப்பட்டவர்களில் அடங்குவார்.

பிரிட்டனுக்கு எதிராகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக துருக்கிய அரசு குற்றம் சாட்டியுள்ளது.

# ஏழு படை உயரதிகாரிகளின் சேவை நீடிப்பு சனாதிபதி சந்திரிகாவால் அங்கீகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் ஏழு உயர்மட்ட உத்தியோ கத்தர்களுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பை சனாதிபதி செல்லுப்படியானவையாக மாற்றியுள்ளார்.

இப்பதவி நீடிப்பு குறித்த அதிகாரிகள் 55வயதை அடையும் வரையான காலப்பகுதிக்கு அல்லது ஒருவருட காலத்திற்கு மாத்திரமே பொருத்தமானது. சமீபத்தில் உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் காரணமாக இவ் இராணுவ அதிகாரிகளின் பதவிநீடிப்பு வலுவிழந்தவையாக மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழினத்தின்...

வுகளை பகிர்ந்து கொள்வதற்காக நடமாடும். ஒலிப் பதிவு கலையகங்களை நிறுவி செயற்பட்டு வருகிறது.

புலிகளின் குரல் எமது தாயக விடுதலைப் போராட்டத்துக்கும். எமது தேசிய இனத்துக்கும் இடையில் ஒரு பாலமாக தொடர்பு சாதனமாக இயங்கி வருவதுடன் எமது போராட்ட கருத்துக் களையும் எமது மக்களின் கருத்து க்களையும் உலகுக்கு எட்டச் செய்யும் ஒரு ஊடகமாக இய ங்கி வருகிறது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர் வணக்க நடனம், வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன. வரவேற்புரையினை புலிகளின் குரல் நிறுவனப் 'போராளி வெற்றிச்செல்வி வழங்கினார். அடுத்து புலிகளின் குரல் வானொலி பற்றிய உரையினை பிரதம செய்தியாசிரியர் தி.தவ பாலன் ஆற்றினார். சிறப்புரையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் அவர்கள் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் வானோசை 13 கலை இலக்கியப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கையொப்பம் தாங்கிய சான்றிதழ்களையும், பரிசில்களையும், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

தொடர்ந்து வானோசை கலைஇலக்கியப்போட்டி பற்றிய மதிப்பீட்டைநிறுவனத்தின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் நா.யோகேந்திரநாதன் நிகழ்த்தினார். அடுத்து புலிகளின் குரல் கலைஞர்களினால் நடத்தப்பட்ட கவியரங்கம் இடம்பெற்றது. நன்றியுரையினை புலிகளின் குரல் நிர்வாக இணைப்பாளர் இ.இராஜேஸ்வரன் நிகழ்த்தினார். (லோ)

## தற்போதைய...

கூறினார்.

கொழும்பில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

சனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி இன்றும் இருப்பதாகக் கூறினார்.

அந்தக் கமிட்டி இருதரப்பினருக்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படாத வகையில் முன்னோக்கிச் செல்லும் வகையில் பொது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறினார். இந்தக் கமிட்டி முன்வைக்கும் யோசனைகளை அடுத்து சனாதிபதியும் பிரதமரும் அடுத்து வரும் பல்லி ரெண்டு தினங்களுக்குள் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவார்கள் எனவும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தவோ அல்லது அமைச்சுக்களை அளிப்பதோ தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது' எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (32)

## பெற்றுக்கொள்ளவும்

வரும்24-ஆம் திகதி திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு தமிழீழ சமூகக் கல்வியும் வரலாறும் தேர்வு தரம் 6,7,8 முல்லை, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு, வடமராட்சி கிழக்கு கல்வி வலயபள்ளிகளில் நடைபெறவுள்ளதால் அதற்கான வினாத்தாள் பொதிகளை நாளை (சனிக்கிழமை) அந்தந்த வலயக் கல்விப் பணிமனைகளில் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

## ஆபாசப்...

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் மூன்று இளைஞர்கள் சேர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளால் திரையிடுவதற்கோ அன்றி வைத்திருப்பதற்கோ முற்றாகத் தடைவிதிக்கப் பட்டிருக்கும் ஆபாசப்படங்களைப் பார்த்துக்கொண்டிருப்பதாக கிளி. காவல்துறையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து உடனடியாக ஆபாசப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த கணினிப் பயிற்சி நிலையத்துக்கு விரைந்த காவல் துறையினரிடம் கையும் மெய்யுமாக மூவரும் மாட்டிக் கொண்டனர்.

மூவரையும் கைதுசெய்த காவல்துறையினர் ஆபாசப்பட குறுந் தட்டு மற்றும் அதனுடன் இணைந்த பொருட்களை கைப்பற்றியதுடன் அதனைப் பார்த்துக்கொண்டிருந்த மூவரையும் கைதுசெய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (லோ)

## சந்திரிகா...

தற்போதைய நிலைமையை டோக்கியோ அரசு தொடர்ந்து கண்காணிக்குமெனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். இலங்கையில் சமாதான முயற்சிக்கான ஏற்பாடு செய்யும் மூன்றாம் தரப்பாகவும், அரச ஏவாளராகவும் ஜப்பான் செயற்பட்டுள்ளது. தொடர்ந்தும் அவ்வாறே நடந்து கொள்ளுமெனவும் கூறியுள்ளார்.

இதேவேளை பொருளாதார மீளமைப்புதுறை அமைச்சரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின் முக்கியஸ் தருமான மிலிந்தமொறகொட, யசுசி அகாசியையும் ஏனைய ஜப்பானிய அதிகாரிகளையும் சந்திக்கும் வகையில் - 5நாள் விஜயமொன்றை ஜப்பானுக்கு மேற்கொண்டுள்ளார். (32)

## மாவீரர்...

யாழ்.படைகளின் பிரதிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் இரட்ணசபாபதியும் சிறிலங்கா பொலிஸ் தரப்பில் யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹெக்டர் தர்மசிறி மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றிய துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் 'தங்கன் மீசாலை மற்றும் வல்வெட்டித் துறைப் பகுதிகளில் இடம்பெற்றது' போன்ற அசம்பாவிதங்கள் எவையும் எதிர்வரும் காலப் பகுதிகளில் இடம்பெறாது என படைத்தரப்பால் இச்சந்திப்பில் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன் மாவீரர் துயிலுமில்லம் சூழலில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதால் மக்களிடையே அச்ச உணர்வு தோன்றியிருப்பதாகவும், மாவீரர்தின நிகழ்வுகளில் படைத்தரப்பின் தலையீடுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் வேதனை அளிக்கும் ஓர் நிகழ்வெனவும் இச்சந்திப்பில் தான் எடுத்துக் கூறியிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

போர்நிறுத்தம் அமுலில் உள்ள நிலையில் சுமுகமான உறவுகள் நிலவ படைத்தரப்பு முன்வர வேண்டுமெனவும் இச்சந்திப்பின் போது வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை மாவீரர் தின நிகழ்வுகளின் போது தமிழீழ தேசியக் கொடியான புலிக் கொடியினை ஏற்றுவதற்குக் குடாநாட்டில் படையினர் அனுமதி வழங்குவார்களா? என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர் "புலிக்கொடி தமிழ் மக்களின் தேசியக் கொடியாகையால் அக்கொடிபற்றிப் படைத்தரப்பு விளங்கிக்கொண்டிருக்குமெனத் தெரிவித்த அவர், புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட பொருட்கள் எவற்றையும் இந்நிகழ்வுகளின் போது பயன்படுத்த படைத்தரப்புத் தடைசெய்யமாட்டாதென்ற உறுதி மொழி வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின், நல்லூர் கோவில் வீதியிலுள்ள யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பு காலை 10 மணிக்கு ஆரம்பமாகிச் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக நீடித்தது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட பிரதம கண்காணிப்பாளர் செல்வி ஹரினா எரிக்சனும் சந்திப்பின் போது பிரசன்னமாகியிருந்தார்.

இதேவேளை மாவீர்தின இருநாளால எதிர்வரும் 27 ஆம் திகதி முகமாலை சோதனைச் சாவடியை நள்ளிரவு 12 மணிவரை திறந்து விடுமாறு விடுதலைப் புலிகளால் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இச்சந்திப்பில் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த மாவீரர்களது பெற்றோர் வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்குச் சென்று அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொள்ளவும், பின்னர் குடாநாட்டிற்குத் திரும்பவும் ஏதுவாகவுமே இக்கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட படைத் தலைமையுடன் பேச்சுக்களை நடத்தி முடிவைத் தெரிவிப்பதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் மாவீரர் தின நிகழ்வுகளை எழுச்சி பூர்வமாகவும், அர்ப்பணிப்புடனும் அனுஷ்டிக்க குடாநாட்டு மக்களை அணிதிரளுமாறு துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கன் அறைகூவல் விடுத்துள்ளார். (32),(27)

# மாவீரர் வெற்றிக் கேடயத்திற்கு மாவட்ட ரீதியாக உதைபந்தாட்டம்

மாவீரர் தினத்தை முன்னிட்டு மாவட்ட ரீதியாக மாவீரர் வெற்றிக்கேடய உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. யாழ். மாவட்டத்தில் யாழ்ப் பாணம், பருத்தித்துறை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளின் ஏற்பாட்டில் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடை பெற்று வருகின்றது. இப்போட்டி ஐம்பதுக்கு மேற்பட்ட கழகங்கள் கலந்து கொள்ளும் மாபெரும் போட்டியாக நடைபெற்று வருகின்றது.

இதேவேளை தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டத்திற்கான போட்டிகள் மாந்தை மேற்கு மடுப்பிரதேசத்தில் இன்றும், நாளையும் நடைபெறும் என மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கவியழகன், ரங்கன் ஆகியோர் தெரிவித்தனர்.

இதே போன்று வவுனியா மாவட்டத்திற்கான போட்டிகள் நேற்று வவுனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருவதாக வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ரதன் தெரிவித்துள்ளார். (10)

# வவுனியாவில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்க பிரதேச ரீதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் சிதம்பரபுரம், புதுக்குளம் வவுனியா நகரம், செட்டிகுளம், ஆகிய பிரதேச ரீதியாக மாவீரர் களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். இதன் முதற் கட்டமாக இன்று செட்டிகுளம் பிரதேசத்தில் வீரபுரம் சேவா லங்கா மண்டபத்தில் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

செட்டிகுளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இசைச் செல்வன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் அவர்கள் கலந்து கொண்டு மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிப்பார்.(10)

# புது.பொன்னம்பலம் மருத்துவமனையில் இலவச கண் சிகிச்சை முகாம்

யாழ்.போதனா மருத்துவமனையில் சேவையாற்றும் கண்சிகிச்சை நிபுணர் டாக்டர் சிவந்தா அவர்களினால் இலவச கண்சிகிச்சையும் சத்திரசிகிச்சையும் மேற்கொள்ளப்படவுள்ளன.

நாளை காலை 9.00மணி முதல்மாலை 4.00மணி வரை புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் மேற்கொள்ளப்படவுள்ள இச்சத்திர சிகிச்சை முகாமில் பயன் பெறவிரும்புவோர் அம்மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## நம்பிக்கை...

எதிர்க்கட்சிகள் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப் பிக்கவிருக்கின்றன.

சம்பிரதாய முறைப்படி சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டால் அது விரைவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அதே நேரம் விவாதம் நடைபெறும் வரை சபாநாயகர் அவரது ஆசனத்திலிருந்து விலகியிருக்க வேண்டும் என்ற நிலையையும் எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டியிருக்கின்றன.

முன்னாள் சபாநாயகர் எம்.எச் முஹமத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது அவர் தனது ஆசனத்திலிருந்து விலகியிருந்தமையை எதிர்க் கட்சிகள் சுட்டிக்காட்டின. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது